இடங்களுக்கு மாற்றினார்கள். மின் வாரியத்தில் இருக்கும் தொழிலாளர் அமைப்புகள் நிர்வாகத்தோடு பேசி ஓராண்டு அவர்கள் அப்படி வெளியூரில் தங்கியிருப்பார்களேயானால் அதற்குப் பிறகு பொது முதன்மை பட்டியல் அடிப்படையில் திரும்பவும் அவர்கள் வேண்டுகின்ற இடத்திற்குப் போடலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மின் வாரியத்தில் கண்காணிப்புப் பிரிவு.

*வினா 445—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மின் வாரியத்தில் லஞ்சக் குற்றச் சாட்டுகள், மற்றும் இதர குற்றங்களைக் கண்டுபிடிக்கச் செய்யப்பட்டுள்ள விஜிலன்ஸ் இலாகாவால் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எத்தனை ?

(ஆ) இதனால் மின் வாரியம் அடைந்த நன்மைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) (i) 1977 நவம்பர் மாதம் வரை பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை—2,224.

(ii) விசாரணைக்கு எடுத்துக் கொண்ட புகார்கள்—695

(iii) விசாரணையின் பேரில் விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்கத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்—34.

(iv) இது வரை விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்கத்தினால் லஞ்சக் குற்றத்திற்காக பிடிபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை—9.

(ஆ) மின் வாரியத்தில் ஒழுக்கம் ஓங்கியிருக்கிறது.

திரு. வீ. கே. கோதண்டராமன் : எந்தெந்த விதமான லஞ்சக் குற்றசாட்டுகள் இன்றைக்குக் கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ? இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளில் 695 குற்றச்சாட்டுகள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் குற்றச்சாட்டுகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ?

1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மீதி கேஸ்களில் நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் இருந்து வருகின்றன. எந்தெந்த விதமான குற்றச்சாட்டுகள் என்று கேட்டார்கள். லஞ்சம் வாங்குவதுதான் குற்றச்சாட்டு. ட்ராப்பிங், கம்ப்ளெயின்ட் வந்தால் அதைப் பற்றி விசாரிக்கப்படுகிறது. அது போன்று பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி : இந்த மின் வாரியத்திலிருந்து பழைய பம்ப் செட்டுகளுக்குக் கூட 400, 500 ரூபாய் பெறுமான கபாசிடர்கள் பொருத்தப்படவில்லை என்றால் மின் இணைப்பைத் துண்டித்து விடுவோம் என்று சொல்லுகிறார்கள். இத்தகைய நிலைமைகள் மேலும் லஞ்சப் புகார்கள் ஏற்பட ஏதுவாக இருக்கிறது. ஆகவே, இந்த உத்தரவை உடனடியாக நிறுத்தி வைத்து பழைய பம்ப் செட்டுகளுக்கு கபாசிடர்கள் தேவையில்லை என்று கூற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பம்ப் செட்டுகளுக்கு கபாசிடர் பொருத்தினால் அது மின்சார இழப்பைத் தவிர்க்கப் பயன்படும் என்பது ஒரு தொழில் நுட்பக் கருத்து. ஆனால் ஏற்கனவே இருக்கிற பம்ப் செட்டுகளைப் பொறுத்த வரை கபாசிடர்கள் வைக்க வேண்டுமென்ற தேவையில்லை என்று மின் வாரியத்திற்கு அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது. ஆனால் புதிதாக பம்ப் செட்டுக்கு மின் இணைப்புக் கோரி வருகிறவர்கள் கபாசிட்டர்கள் பொருத்த வேண்டும்.

திரு. இ. தமிழரசன் : மின் வாரியத் துறையில் மின் இணைப்புக்கு மனுக் கொடுப்பதிலிருந்து இணைப்புக் கொடுக்கிற வரை கமிஷன் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. பெரும்பாலும் மின் இணைப்புக்கு உத்தரவிட்ட பின் மின் வாரியம் கொடுக்க வேண்டிய பொருள்களில் பாதியைக் கொடுத்து விட்டு அவசர நிலை காரணமாக மீதியை சம்பந்தப்பட்டவர்களையே வாங்கிக் கொடுக்கச் சொல்லுகிறார்கள். அப்படி மின் வாரியத்தால் கொடுக்கப்படாத மீதிப் பொருள்கள் கணக்கில் காட்டப்படுகிறதா? மின் இணைப்பு பம்ப் செட்டுகளுக்குக் கொடுக்கிற நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பவருக்குப் பதிலாக அதிகமான பவர் பம்ப் செட்டுகள் வாங்கி வைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை மின்சாரத் துறை ஏற்றுக் கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று விதமான குறைகளைச் சொன்னார்கள். ஓரளவுக்கு அது அரசுக்கும் தெரிந்துதான் இருக்கிறது. ஒன்று, பம்ப் செட்டுகளுக்கு மனுப் போடுகிறவர்கள் மின்சாரம் பெறுகிற வரை அவர்கள் சுயநலம் கருதி கமிஷன் கொடுக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்; இப்படி

[1978 மார்ச் 8

கமிஷன் கொடுப்பதால் தான் இன்றைக்குக் கமிஷன்கள் எல்லாம் வந்து விடுகின்றன. இருந்தாலும் கூட அந்த முறையைச் சீராக்குவதற்காக எந்தத் தேதியில் இருந்து பம்ப் செட்டுகளுக்கு மனுக் கொடுத்திருக்கிறார்களோ அந்தத் தேதியின் அடிப்படையில் தான் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்ற விதி மின்சார வாரியத்திலிருந்து பிறப்பிக்கப்படவிருக்கிறது. ஆகவே, கீழ் மட்டத்தில் இருக்கும் அதிகாரியோ, பணியாளரோ இப் போது இருக்கும் பல்வேறு விதி முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு மின் இணைப்புக் கோருகிறவர்களுக்கு இடைஞ்சல் ஏற் படாதவாறு செயல்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

இரண்டாவதாக பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கு வதற்குப் போதுமான மெட்டிரியல்ஸ், சாமான்கள் உரிய நேரத் தில் வாங்கி வைக்காத காரணத்தாலேயும் இப்படிப்பட்ட நிலைமை வருகிறது. உரிய காலத்திலே அவைகளை வாங்கி வைப்பதற்குத் தனி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மூன்றாவதாக அவர்கள் போடுகிற பம்பு செட்டுகளுக்கு அதிக மான மின்சாரத்தைப் பயன்படுத்துகிற அளவில் ஹார்ஸ் பவரை அதிகப்படுத்திக் கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட புகார் ஏதேனும் வருமானால், அது பற்றியும், சர்ப்ரைஸ் செக்ஸ் மூலமும் இத்தகைய தவறான முறையில் பயன் படுத்துகிறவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லஞ்ச ஒழிப்பு என்பது பொது மக்களும் விழிப்போடு இருக்க வேண்டிய காரியம் ஆகும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறையிலே அரசு அச்சகம் இருந்தும் கூட அங்கே அச்சடிக்காமல் வேறு தனியார் துறைகளிலே அச்சடிக்கப் படுவதன் காரணமாகவும், மின் துறையிலே பல்புகள் தயாரிக்கக் கூடிய துறை இருந்தும் பல்புகளை வெளியே வாங்குவதன் காரண மாகவும் இப்படிப்பட்ட பலவித தவறுகள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவைகளை நீக்குவதற்கான முறை யிலே அரசே, அவைகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின் துறையிலே. இருக்கிற அச்சகம் மின் துறையின் தேவைக்குப் போதுமானதல்ல மின்சார வாரியம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க வேண்டுமே தவிர பல்புகளை உற்பத்தி செய்ய வேண்டியது இல்லை,